மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) ரூபாய் 23.64 இலட்சம்.

திரு. என். கணபதி : தலைவர் அவர்களே, இந்தப் பரிசுச் சீட்டுக்களில் பெரும்பாலும் எண்ணிக்கையைத் திருத்தக்கூடிய சம்பவங்கள் நிறைய நடைபெறுகின்றனவே? அதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : எண்ணிக்கையைத் திருத்தினாலும், வேறு வகைகளில் கண்டுபிடிக்கக்கூடிய அளவில் குறிப்புக்கள் அச்சடிக்கப்பட்டிருக்கின்றன.

Destruction of Nylon fishing nets at Oorur Kuppam

* 511 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state wheher nylon fishing nets were destroyed by fire at Oorur Kuppam near Adyar in Madras City about the 6th April, 1971?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: ஆம். ஊரூர் குப்பத்தில் 5—4—71 அன்று ஒரு தீ விபத்து ஏற்பட்டது. இத்தீவிபத்தில், திருமதி முத்தம்மாள் என்பவருக்குச் சொந்தமான ரூ. 2,000 மதிப்புடைய இரண்டு நைலான் வலைகள் சேதமடைந்து பயனற்றுப் போய்விட்டன.

Supply of nylon twine to fishermen.

* 512 *Q.*—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state :

(*a*) the grounds on which the Nylon nets are being sold to fishermen in this state; and

(*b*) the details thereof?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) & (இ) இம்மாநிலத்திலுள்ள மீனவர்களுக்கு நைலான் வலைகள் வழங்கும் பணியை மாநில மீனளத்துறை மேற்கொண்டிருக்கவில்லை. கீழ்க்கண்ட இரு திட்டங்களின்கீழ் நைலான் மீன்பிடி முறுக்கு நூல் மட்டுமே வழங்கப்படுகிறது :—

(1) ஈடுசெய் விலை அடிப்படையில் மீனவர்களுக்கு மீன்பிடி விசைப் படகுகள் வழங்குதலுடன் கூட நைலான் நூலும் வழங்குதல்.

(2) மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக மீனவர்களுக்கு ஈடுசெய் விலையில் நைலான் முறுக்கு நூல் வழங்குதல் முதல் திட்டத்தின்கீழ், மீன்பிடி விசைப் படகுகள் ஒதுக்கம் செய்யப்படும் பொழுது 30 அடி நீளப் படகுக்கு 100 கிலோ நைலான் முறுக்கு நூலும், 32 அடி நீளப்படகுக்கு 150 கிலோ நைலான் முறுக்கு நூலும் வழங்கப்படுகிறது. வழங்கப்படும் நைலான் முறுக்கு நூல் விலையில் 20 சதவீதம் குறைத்து வழங்கப்படுகிறது. எஞ்சிய தொகை, ரெண்டாண்டுகால அளவுக்குள் 18 மாதத்தவணைகளில் வசூல் செய்யப்படுகிறது

1971 சூலை 28]

இரண்டாவது திட்டத்தின் கீழ் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களால் நேரடியாக வாங்கப்பட்டு, நாட்டுப்படகு வைத்திருக்கும் சங்க உறுப்பினர்களான மீனவர்களுக்கு வழங்கப்படுகிற நைலான் முறுக்கு நூலின் விலையில் 20 சதவிதம் உதவித்தொகையாக அளிக்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்டவற்றுக்கு மேலாக, இயற்கை இழைக்கும் இன்னல்களால் நைலான் வலைகளை இழந்த மீனவர்களுக்கும், 18 மாதத் தவணைகளில் வசூலிக்கப்படுகின்ற வகையில் முழுவிலை அடிப்படையில் நைலான் முறுக்கு நூல் வழங்கப்படுகிறது.

திரு. எம். சுரேந்திரன்: நைலான் நூல் வழங்குவதில் முன்பு 20 சதவிதம் மானியம் வழங்கப்பட்டதே, அது இப்போது 15 சதவிதமாகக் குறைக்கப்பட்டுவிட்டது என்பது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இல்லை. 20 சதவிதம் மானியத் தொகைதான் அளிக்கப்பட்டு வருகிறது.

திரு. கி. ஜெயராமன்: நைலான் நூல் தனிப்பட்டவர்களிடம் இருந்து வாங்கப்படுகிறது என்றால் கூட்டுறவுத்துறையில் ஒரு ஆலையை ஏற்படுத்தி அதன் மூலம் மீனவர்களுக்கு நைலான் நூல் வழங்குவது சரியாக இருக்காதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: மீனவர்களுக்கு தனிப்பட்டவர்களிடம் இருந்து கொடுக்கும்போது குறிப்பிட்ட விலையில்தான் கொடுக்கப்படுகிறது. அவர்கள் வலையாகவே பின்னிக் கொடுக்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அது பிறகு ஆலோசிக்கப்படும்.

தாழ்த்தப்பட்டோருக்கு சிறுதொழில்கள் தொடங்க கடன்கள்

* 513 வினா—திரு. மா. பா. சாரதி: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாழ்த்தப்பட்டோருக்கு சிறுதொழில்கள் தொடங்க வட்டியில்லாக் கடன் (Interest free loan to petty traders belonging to Scheduled Castes) அரசால் வழங்கப்படுகிறதா?

(இ) எந்தெந்த தொழிலுக்கு கடன் வழங்கப்படுகிறது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: (அ) ஆம்.

(இ) கீழ்க்கண்ட சிறு தொழில்களுக்கு வட்டியில்லாக் கடன் கொடுக்கப்படுகிறது:—

(1) அச்சகம் வைக்க.

(2) இயந்திரத்தால் பாத அணி செய்தல்.

(3) இயந்திர கம்மியர் தொழில் (Motor Mechanic).

(4) தகட்டு வேலையும், வர்ணம் பூசுதலும்.

(5) கடைசல் வேலை செய்தல்.

(6) மின்சாரத்தாலும், வாயுவாலும் பற்ற வைத்தல் வேலை செய்தல்.

(7) மளிகைக் கடை, நியாயவிலை அரிசிக்கடை வைத்தலும்.